| | | |
|---|---|---|
| | ரோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | |
| | மூன்றாந் தவணைப் பரீட்சை – 2022 (2023)<br>**3rd Term Examination – 2022 (2023)** | 42 \| T \| I,II |
| | கர்நாடக சங்கீதம் **I,II** தரம் 11<br>Carnatic Music **I,II** Grade 11 | நேரம் 3 மணித்தியாலம்<br>Time 3 Hours |

**கவனிக்குக:-**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கிடமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- **அவ் விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.**

1) இந்தியாவின் தேசிய வாத்தியம் எனப்படுவது,
   1. மிருதங்கம் 2. வீணை
   3. புல்லாங்குழல் 4. நாதஸ்வரம்

2) ஆனந்தபைரவி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடப்படுவது
   1. புராணம் 2. திருவாசகம்
   3. திருப்பல்லாண்டு 4. திருப்பாவை

3) “ கந்தர்வ கனலோல” என ஆரம்பிக்கும் சரணத்தையுடைய கீர்த்தனையின் பல்லவி
   1. இனி நமக்கொரு கவலையும் 2. அள்ளியுண்டிடலாம் வாரீர்
   3. ஸ்ரீ இராஜராஜேஸ்வரி 4. உள்ளமிரங்கி

4) பின்வருவனவற்றுள் மிஸ்ரஜாதி அடதாளத்தினைக் குறிப்பது
   1. $1_7$ 0 $1_7$ $1_7$ 2. $1_7$ $1_7$ 0 0
   3. $1_5$ 0 $1_5$ $1_5$ 4. $1_9$ $1_9$ 0 0

5) இசைக்கச்சேரிகளில் பிரதான வாத்தியமாக வாசிக்கக் கூடிய வாத்தியங்கள்
   1. வயலின், புல்லாங்குழல், கஞ்சிரா
   2. புல்லாங்குழல், தம்புரா, மோர்சிங்
   3. புல்லாங்குழல், வீணை, வயலின்
   4. நாதஸ்வரம் புல்லாங்குழல்,ஒத்து

6) கோயில்களில் இறைவன் வீதியுலா வரும்போது நாதஸ்வரத்தில் வாசிக்கப்படும் உருப்படி
   1. இராகமாலிகை 2. மல்லாரி
   3. திருவூஞ்சல் 4. நவக்ரக கீர்த்தனை

7) வயலின் வாத்தியம் ஒரு
   1. ஸ்திர, வாத்தியம், சகலவாத்தியம்
   2. சரவாத்தியம், ஏகத்வனி, வாத்தியம்
   3. ஏகத்வனி, வாத்தியம், நிஷ்கள் வாத்தியம்
   4. சரவாத்தியம், பஹுத்வனி, வாத்தியம்



kalvi.lk

8) மத்தியஸ்தாயி நிஷாதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம்
1. நாதநாமக்கிரியை 2. நவரோஜ் 3. குறிஞ்சி 4. பிலஹரி

9) பஜனைப்பத்ததியின் தந்தை எனப் போற்றப்படுபவர்
1. ஹரிபாலர் 2. தாளப்பாக்கம் சின்னையா
3. முத்துத்தாண்டவர் 4. அன்னமாச்சாரியார்

10) வக்ர இராகத்திற்கு உதாரணம்
1. மோகனம் 2. பிலஹரி
3. கமாஸ் 4. சுத்தஸாவேரி

11) தோஷ நிவர்த்திக்குரிய இராகம்
1. மத்யமாவதி 2. மோகனம் 3. கல்யாணி 4. கரஹரப்ரியா

12) ‘‘ஞானச்சிந்து’’ , ‘‘ஞானக்கும்பி’’ என்பவற்றை இயற்றிய வாக்கேயகாரர்
1. அருணாசலக்கவிராயர் 2. முத்துத்தாண்டவர்
3. கோபலகிருஷ்ண பாரதியார் 4. பாபநாசம்சிவன்

13)பின்வருவனவற்றில் ஹிந்துஸ்தானி சங்கீதத்திற்குப் பொருத்தமான கூற்று
1. கரஹரப்ரியா இராகத்தை இங்கு பிலாவல் என அழைப்பர்.
2. 35 பிரதான தாளங்களை இங்கு பயன்படுத்துவர்
3. இது வட இந்திய மக்களின் பிரதான இசைமரபு ஆகும்.
4. வயலின் பிரதான வாத்தியமாக இங்கு பயன்படுத்தப்படுகிறது.

14) ‘‘பண்ணும் பதமேழும்’’ என்னும் தேவாரத்தின் பண், தாளம் என்பன முறையே
1. நட்டபாடை, சதுஸ்ரஏகம் 2. கொல்லி, ரூபகம்
3. நட்டராகம், ஆதி 4. நட்டபாடை, ரூபகம்

15) வாத்திய இசையைக் கேட்கும் போது அவ்வாத்தியத்தினை இனங்காண உதவுவது
1. வாசிக்கும் கலைஞனின் கற்பனைத்திறன்
2. அவற்றின் தனித்துவமான ஒலிப்பண்பு
3. வாசிக்கப்படும் உருப்படிகள்
4. பயன்படுத்தப்படும் நவீன ஒலிபெருக்கிச்சாதனங்கள்

16)‘‘சின்னஞ்சிறு கிளியே’’ என்ற இராகமாலிகையில் ‘‘கன்னத்தில் முத்தமிட்டால்’’ என்ற பாடல் பகுதி அமைந்துள்ள இராகம் .
1. மாண்டு 2. வசந்தா 3. நீலமணி 4. திலங்

17) ஒரு வர்ணத்தின் சரணத்தையும் சரண ஸ்வரங்களையும் உள்ளடக்கிய பகுதி
1. திரியாங்கம் 2. ஷடாங்கம் 3. பூர்வாங்கம் 4. உத்தராங்கம்

18) இரட்டைப் பெயர்களுடன் விளங்கும் ஸ்வரஸ்தனங்களாவன
1. சுத்த ரிஷபம், சாதாரணகாந்தாரம், சுத்ததைவதம், காகலி நிஷாதம்.
2. சதுஸ்ருதி ரிஷபம், சாதாரணகாந்தாரம், சுத்ததைவதம், காகலி நிஷாதம்.
3. சதுஸ்ருதி ரிஷபம், சாதாரணகாந்தாரம், சதுஸ்ருதி தைவதம்,கைசிகி நிஷாதம்.
4. சுத்த ரிஷபம், சாதாரணகாந்தாரம், சதுஸ்ருதிதைவதம், கைசிகி நிஷாதம்.

19) ஸ்ாநீதபதா நிதா ; ; த பா ; என்னும் ஸ்வரக் கோர்வையின் மொத்த அட்சரகாலம்
1. 8 2. 10 3. 12 4. 14

20) வயலின் வாத்தியத்தினை வாசிப்பதில் பிரபல்யமாக விளங்கிய இத்தியக் கலைஞர்
1. புத்துவாட்டி சோமு 2. எஸ். பாலச்சந்தர்
3. டி.என்.கிருஷ்ணன் 4. டி.வி.பிச்சையப்பா



kalvi.lk

21) முத்துஸ்வாமி தீக்ஷிதர் இயற்றிய முதலாவது உருப்படி
1. ஸ்ரீ கணபதி
2. கஞ்சதளாயதாக்ஷி
3. ஸ்ரீ நாதாதி
4. அக்ஷயலிங்க

22) ''ஸ்வரமேளகலாநிதி'' என்னும் சமஸ்கிருத கிரந்தத்தை எழுதியவர்
1. ராமாமாத்யர்
2. ஷேத்ரக்ஞர்
3. பச்சிமிரியம் ஆதியப்பையர்
4. வேங்கடமகி

23) ஸரகிமபதநி என்னும் ஸ்வர ஸங்கேதங்களால் குறிக்கப்படும் இராகம் யாது?
1. சங்காரபரணம்
2. கல்யாணி
3. தோடி
4. கரஹரப்ரியா

24) தெலுங்கு , வடமொழி, தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் உருப்படிகளை இயற்றியவாக்கேயகாரர்
1. புரந்தரதாஸர்
2. தியாகராஜ ஸ்வாமிகள்
3. சியாமா சாஸ்திரிகள்
4. முத்துஸ்வாமி தீக்ஷிதர்

25) வேங்கடமகி அவர்களின் வழித்தோன்றாலக வந்த வாக்கேயகாரர்
1. தியாகராஜ ஸ்வாமிகள்
2. புரந்தரதாஸர்
3. பாபநாசம்சிவன்
4. முத்துஸ்வாமி தீக்ஷிதர்

26) வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் இடம்பெறும் வாத்தியங்கள்
1. கடம்,ஓர்கன்
2. தவில், புல்லாங்குழல்
3. ஹார்மோனியம்,விற்கடம்
4. உடுக்கை, வயலின்

27) தகதிமிதகிட (4+3) என்ற நடையில் அமைந்த விலோம சாபு தாளத்தில் கிருதிகளை இயற்றியவர்
1. முத்துத்தாண்டவர்
2. சியாமா சாஸ்திரிகள்
3. முத்துஸ்வாமி தீக்ஷிதர்
4. பச்சிமிரியம் ஆதியப்பர்

28) ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், கைசிகி நிஷாதம் என்னும் ஸ்வரல் தாளங்களையுடடைய இராகம்
1. மாயாமாளவகௌளை
2. ஹரிகாம்போஜி
3. கரஹரப்ரியா
4. கல்யாணி

29) கீர்த்தனை ஓர் / ஒரு
1. அப்பியாசகான உருப்படி
2. மாலை வேளைகளில் மட்டும் பாட உகந்த உருப்படி
3. சபாகான உருப்படி
4. கீதத்திற்கு அடுத்ததாகக் கற்பிக்கப்படும் உருப்படி

30) 72 மேளகர்த்தா அமைப்பில் 7 ஆவது, 9 ஆவது சக்கரங்களின் பெயர்கள் முறையே
1. அக்னி, ரிஷி
2. ரிஷி, ப்ரஹ்ம்
3. வஸு, பர்ஹம
4. ரிஷி,ருது

31) சங்ககாலத்திலிருந்த உலகியல் சார்ந்த இசை, பக்தி இசையாக மறுமலர்ச்சி கண்டது
1. சோழர் காலத்தில்
2. பல்லவர் காலத்தில்
3. நாயக்கர் காலத்தில்
4. வேதகாலத்தில்



kalvi.lk

32) தமிழ்ப் பதங்கள் இயற்றிய வாக்கேயகாரர்கள்
1. கஸ்தூரி ரங்கர், முத்துத்தாண்டவர்
2. சேத்ரக்ஞர், கவிக்குஞ்சர பாரதி
3. மாம்பழக்கவிராயர், சாரங்கபாணி
4. கவிக்குஞ்சர பாரதி, கனம் கிருஷ்ணய்யர்

33) மேலைத்தேய இசையில் பயன்படுத்தப்படும் வாத்தியங்களாவன
1. கிற்றார்,ஓர்கன்
2. பியானோ, தபேலா
3. வயலின், ஓர்கன்
4. தம்புரா, ஹார்மோனியம்

34) "சங்கீரண" என்ற விருதைப் பெற்ற பல்லவர் காலத்து மன்னன்
1. மகேந்திரவர்மன்
2. நின்றசீர் நெடுமாறன்
3. ராஜராஜ சோழன்
4. வரகுண பாண்டியன்

35) ஐந்து அங்கங்களைக் கொண்ட உருப்படி
1. கீர்த்தனை
2. இராகமாலிகை
3. வர்ணம்
4. ஸ்வரஜதி

36) தேவாரப் பதிகங்களை பண்முறையில் பாடிப் பரவச்செய்தவர்கள்
1. ஆழ்வார்கள்
2. ஓதுவார்கள்
3. வாக்கேயகாரர்கள்
4. வைணீகர்கள்

37) " பிரகலாத பக்தி விஜயம்" என்ற இசை நாடகத்தை இயற்றியவர்
1. முத்துஸ்வாமி தீக்ஷிதர்
2. தியாகராஜ சுவாமிகள்
3. புரந்தரதாஸர்
4. சியாமா சாஸ்திரிகள்

38) 'சிவகாம சுந்தரி' என்ற முகாரி இராகக் கிருதியின் எடுப்பு
1. அதீத எடுப்பு
2. சம எடுப்பு
3. அனாகத எடுப்பு
4. ஆகத எடுப்பு

39) பின்வருவனவற்றுள் பதம் என்னும் உருப்படிக்குப் பொருத்தமற்ற கூற்று
1. இது இசைக்கச்சேரிகளில் பாடப்படும் ஒரு சபாகான உருப்படியாகும்.
2. இது நாட்டியக் கச்சேரிகளில் முதல் உருப்படியாக இடம்பெறும்.
3. இது நாயக, நாயகி பாவத்தை கொண்ட கிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தும்.
4. இது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்கங்களை உடையது.

40) பின்வரும் கூறுகளைக் கருதுக.

A- இது ஒரு ஸ்திர வாத்தியம்.

B- நான்கு ஸ்தாயிகள் வரை வாசிக்கக் கூடிய வாத்தியம்

C- மிகத் துரித காலங்களில் வாசிக்க இயலாத வாத்தியம்.

D- வில்போட்டு வாசிக்கப்படும் வாத்தியம்.

E- டி.என்.கிருஷ்ணன் இவ் வாத்தியத்தை வாசித்துப் பிரபல்யம் அடைந்தார்.

மேற்கூறப்பட்ட கூற்றுகளில் வயலின் வாத்தியம் பற்றிய சரியான கூற்றுக்கள்

1. A B C    2. A C D    3. B C D    4. B D E

( 40X1=40புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – 11

**கவனிக்க:-**

- **முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

1) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.
   (i) நாடோடிப் பாடல்களிலிருந்து தோன்றிய தாளம் யாது?
   (ii) ஸ்ட்ராடிவேரியஸ் எனும் ஐரோப்பியரால் உருவாக்கப்பட்ட வாத்தியம் யாது?
   (iii)"விரிபோணி" என்னும் பைரவி இராக அடதாள வர்ணத்தை இயற்றியவர் யார்?
   (iv) கனராக பஞ்சரத்னக் கீர்த்தனைகளைத் தெலுங்கு மொழியில் இயற்றியவர் யார்?
   (v) T.R மகாலிங்கம் எவ்வாத்தியத்தினை வாசித்துப் பிரபல்யமடைந்தார்?
   (vi) பல்வேறு வகையான இசைக்கருவிகள் ஒன்றாக இணைந்து இசைக்கப்படும் நிகழ்ச்சியின் சிறப்புப் பெயர் யாது?
   (vii) ஹிந்துஸ்தானி இசையின் பிரதான தாளவாத்தியம் யாது?
   (viii) பொன் ஸ்ரீ வாமதேவன் அவர்களால் இயற்றப்பட்ட இலட்சணகீதம் யாது?
   (ix) திஸ்ரஜாதி துருவதாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கையை ஒத்த வேறு இரு தாளங்களைத் தருக.
   (x) முத்துஸ்வாமி தீக்ஷிதர் இயற்றிய இரு நவாவர்ணக் கீர்த்தனைகளின் பெயர்களைத் தருக.

( 12 புள்ளிகள்)

2) பின்வரும் இராகங்களுள் விரும்பிய ஓர் இராகத்தின் இலட்சணத்தை விரிவாகத் தருக. ( உருப்படிகள், சஞ்சாரங்கள் என்பன எழுதப்படல் வேண்டும்)
   (i) பந்துவராளி (ii) மத்தியமாவதி (iii) தோடி

( 12 புள்ளிகள்)

3) பின்வருவனவற்றுள் விரும்பிய ஒன்றினைப் பற்றி விரிவான விளக்கத்தைத் தருக. (இயற்றியவர் பெயர்களையும் உதாரணங்களையும் தெரிவு செய்த விடயத்திற்கேற்ப குறிப்பிடல் வேண்டும்)
   (i) இரகமாலிகை (ii) சாபுதாளம் (iii) விவாதி மேளங்கள்

( 12 புள்ளிகள்)

4) (i) மிருதங்க வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
   (ii) இவ்வாத்தியத்தின் சிறப்புக்கள் இரண்டினைத் தருக.
   (iii) இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.
   (iv) இவ்வாத்தியத்தினைச் சுருதி சேர்க்கும் முறையினைத் தருக.

( 12 புள்ளிகள்)

5) சியாமா சாஸ்திரிகளின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைப் பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.
   (i) வாழ்க்கைக் காலம் (ii) பிறந்த இடம்
   (iii) இளமைக்காலம் (iv) வாழ்க்கைச் சம்பவங்கள்
   (v) இவர் இயற்றிய உருப்படிகள் நான்கு
   (vi) இவரது உருப்படிகளின் சிறப்புக்கள் இரண்டு

( 12 புள்ளிகள்)

6) (i) தற்கால வழக்கிலுள்ள பண்கள் எத்தனை?
   (ii) அவற்றுள் எட்டுப் பண்களையும் அவற்றிற்கு ஒப்பான இராகங்களையும் தருக.
   (iii) பண்களுக்கும் இராகங்களுக்கும் பொதுவான பண்புகள் நான்கினைத் தருக.
   (iv) கானகாலத்தை அடிப்படையாகக் கொண்ட பண்களின் பிரிவுகளைக்கூறி அவற்றிற்கு ஒவ்வொரு உதாரணங்களையும் தருக.

( 12 புள்ளிகள்)

7) நீர் கற்றுக் கொண்ட தானவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியை இராக,தாள, ஸ்வர,ஸாகித்ய அங்க அடையாளங்களுடன் எழுதுக.

( 12 புள்ளிகள்)



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457